## காலையும் மாலையும்

காலையும் மாலை எவ்வேளையும் கர்த்தரைக்
கருத்துடன் பாடிடுவேன்
பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர் எனத் தூதர்
பாடிடும் தொனி கேட்குதே

கர்த்தர் என் வெளிச்சம், ஜீவனின் பெலனும்
கிருபையும் இரட்சிப்புமானார்
அஞ்சிடாமல் கலங்காமல் பயமின்றி திகிலின்றி
அனுதினம் வாழ்ந்திடுவேன்

ஒன்றை நான் கேட்டேன் அதையே நாடுவேன்
என்றும் தம் மகிமையைக் காண
ஜீவனுள்ள நாளெல்லாம் தம் ஆலயத்தில் தங்குவதை
வாஞ்சித்து நாடிடுவேன்

எந்தன் முகத்தைத் தேடுங்கள் என்று
என் கர்த்தர் சொன்னதினாலே
தம் முகத்தை தேடுவேனே கூப்பிடும் என் சத்தம் கேட்டு
தயவாக பதிலளிப்பார்